**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருத்தணி**

**அ.வ.எண்.6/2019**

இந்நீதிமன்றத்து எழுத்தர் திருமதி B. கௌசல்யா அவர்களால் சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு வாதி தரப்பு 2ம் சாட்சியின் வாக்குமூலம் 1873 ஆம் ஆண்டு 10 வது சட்டத்திற்கு உட்பட்டு இன்று 2025 ஆண்டு ஜனவரி மாதம் 20 ஆம் நாளில் பதிவு செய்யப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : சுப்பிரமணி | மதம் | : இந்து |
| த/பெ | : வீராசாமி | ஜாதி | : -- |
| வயது | : 49 | கிராமம் | : செருக்கனூர் |
| தொழில் | : கூலி | வட்டம் | : திருத்தணி |

**20.01.2025**

**வா.சா. 2 திரும்ப அழைக்கப்பட்டு பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை**

1. எனக்கு நீதிமன்றத்தில் இருந்து சாட்சி சொல்ல அழைப்பாணை வந்ததா என்றால் இல்லை. வாதி அழைத்ததன் பேரில்தான் நான் சாட்சி சொல்ல வந்துள்ளேன் என்றால் சரிதான். என் வீடு செருக்கனூர் புது காலனியா பழைய காலனியா என்றால் பழைய காலனி ஆகும். என்னுடைய பிரமாண வாக்குமூலத்தில் புதிய காலனி என்று குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். எனக்கு புதிய காலனியில் வீடு இல்லை என்றால் சரிதான். வழக்கு யார் யார்மீது தாக்கல் செய்துள்ளார் என்றால் கன்னியப்பன் மீது சதாசிவம் தாக்கல் செய்துள்ளார்.

2. வழக்கு சொத்தின் புல எண், விஸ்தீரணம், நான்கு எல்லைகள் தெரியாது என்றால் சரிதான். புதிய காலனியில் பட்டா எப்போது கொடுத்தார்கள் என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. வாதி சதாசிவம் வீட்டின் புல எண் தெரியுமா என்றால் தெரியாது. வாதி சதாசிவம் வீடு புதிய காலனியா, பழைய காலனியா என்றால் புதிய காலனி ஆகும். சதாசிவத்திற்கு எத்தனை குழந்தைகள் என்றால் 3 ஆண் பிள்ளைகள், 1 பெண் பிள்ளை ஆகும். அந்த பெண் பிள்ளைதான் அந்த வீட்டில் வைத்து இறந்துவிட்டார். அதற்குதான் நாங்கள் அனைவரும் சென்றிருந்தோம்.

3. சதாசிவமும் 3 பிள்ளைகளும் ஒன்றாக வசிக்கிறார்களா என்றால் ஆமாம். அந்த வீடு மாடி வீடா என்றால் இல்லை. குடிசை வீடுதான். அந்த குடிசை வீட்டில்தான் சதாசிவமும் 3 பிள்ளைகளும் ஒன்றாக வசிக்கிறார்களா என்றால் சதாசிவமும் 2

பிள்ளைகளும் அந்த வீட்டில் வசிக்கிறார்கள். பெரிய மகன் மட்டும் தனியாக பக்கத்தில் உள்ளார்.

சதாசிவமும் 2 பிள்ளைகளும் அந்த குடிசை வீட்டில் ஒன்றாக வசிக்கிறார்கள் என்றால் ஆமாம். நான் சொல்வது பொய் என்றாலும் புதிய காலனியில் சதாசிவத்திற்கு மாடி வீடு உள்ளது என்றாலும் அதில்தான் சதாசிவமும் 2 பிள்ளைகளும் வசிக்கிறார்கள் என்றாலும் இல்லை.

4. சதாசிவம் வெளியூரில் 6 மாதம் இருந்ததாக சொல்வதில் எந்த ஊரில் இருந்தார் என்றால் அதே ஊரில் சிறிது நாளும் அவரது மனைவியின் அம்மா வீட்டில் கொஞ்ச நாளும் இருந்தார். அவரது மகள் இறந்தபோது அவ்வாறு இருந்தார். அதே ஊரில் சிறிது நாள் இருந்ததாக சொல்வதில் எந்த வீட்டில் இருந்தார் என்றால் உறவினர்கள் வீட்டில் இருந்தார். நான் பிரமாண வாக்குமூலத்தில் அவ்வாறு சொல்லவில்லை என்றால் சரியல்ல. சதாசிவத்திற்கு அதே ஊரில் உள்ள வேறு வீட்டில்தான் உள்ளார் என்றாலும் வழக்கு சொத்திற்கும் அவருக்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றால் சரியல்ல.

5. சதாசிவத்திற்கு அந்த இடம் எப்படி வந்தது என்றால் அது எனக்கு தெரியாது. ஆனால் நான் பார்த்ததில் இருந்து அங்குதான் உள்ளார். வழக்கு சொத்திற்கு பட்டா யார் பெயரில் உள்ளது என்றால் சதாசிவம் பெயரில் உள்ளதா, அவரது அப்பா பெயரில் உள்ளதா என்று தெரியாது. கன்னியப்பன் எந்த ஊர் என்றால் அவருக்கு திருத்தணியிலும் வீடு உள்ளது. செருக்கனூரிலும் வீடு உள்ளது. அங்கு 2 மாதம் இங்கு 2 மாதம் இருப்பார். அவரது பூர்வீகம் செருக்கனூர் என்றால் ஆமாம். புதிய காலனியில் ஆறுமுகம், சந்தோஷம், ராபின் ஆகியோர் செருக்கனூர் புதிய காலனியில் உள்ளார் என்றால் சரிதான்.

6. கஜேந்திரன், தங்கவேலு, E.P. ராஜ் ஆகியோர் செருக்கனூர் புதிய காலனியில் உள்ளார்கள் என்றால் கஜேந்திரன், தங்கவேலு இல்லை. ராஜ் இறந்துவிட்டார். அவரது மகன்கள் உள்ளார்கள். வழக்கு சொத்து பிரதிவாதிக்கு பாத்தியப்பட்ட சொத்து என்றாலும் வழக்கு சொத்திற்கும் வாதிக்கும் சம்பந்தமில்லை என்றாலும் சரியல்ல. நான் வாதிக்கு ஆதரவாக பொய்யாக சாட்சி சொல்கிறேன் என்றாலும் எனது பிரமாண வாக்குமூலத்தில் பொய்யான விவரங்கள் சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. எனக்கு வழக்கு சொத்து பற்றி எந்த விவரமும் தெரியாது என்றால்

புல எண் மட்டும் தெரியாது.

7. வீடு எரிந்ததற்கு வருவாய் துறையினர் விசாரித்து இழப்பீடு கொடுத்ததை நான் பார்த்தேனா என்றால் பார்த்தேன். அதில் புல எண் உள்ளிட்ட விவரம் இருந்ததா என்றால் அதை நான் பார்க்கவில்லை. வழக்கு சொத்து வேறு தீ எரிந்த இடம் வேறு என்றால் சரியல்ல. வழக்கு சொத்து பிரதிவாதிக்கு கொடுக்கப்பட்ட சொத்து என்றாலும் வாதிக்கு சம்பந்தமில்லை என்றாலும் சரியல்ல. வாதிக்கு பட்டா உள்ளதா என்றால் அது வீடு எரியும்போது எரிந்துவிட்டது. எந்த வருடம் வீடு எரிந்தது என்றால் 16, 17 வருடம் இருக்கும். தெளிவாக தெரியவில்லை.

8. பட்டா அதன் பின்பு வாங்கினார்களா என்றால் அதன் பின்பு வாங்கினார்கள். வருடம் தெரியவில்லை. வீடு எரிந்து 4, 5 வருடங்கள் கழித்து பட்டா வாங்கியிருப்பாரா என்றால் அந்த வருடமே வாங்கிவிட்டார். கிராம நிர்வாக அதிகாரி, தலையாரி, பஞ்சாயத்து தலைவர் உள்ளிட்ட அனைவரும் வீடு எரிந்த போது வந்து பார்த்து சென்றார்கள். எங்கு வைத்து வாதிக்கு பட்டா கொடுத்தார்கள் என்றால் பட்டா கொடுத்ததாக சொன்னார்கள். எங்கு வைத்து கொடுத்தார்கள் என்பது எனக்கு தெரியாது. வழக்கு சொத்து கன்னியப்பன் உடையது என்றாலும் சதாசிவத்திற்கும் வழக்கு சொத்திற்கும் எந்த சம்பந்தமில்லை என்றாலும் சரியல்ல. வாதி எனது உறவினர் என்பதால் நான் பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல.

(மறு விசாரணை இல்லை)